அரசுக்கு ஒரு கெட்ட பெயர் உருவாகக்கூடிய சூழ்நிலை இருப்பது போன்று சொன்னார்கள். எனது தொகுதியில் அதாவது ஆண்டிமடம் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான தொழிற் சாலையும் இல்லை. எனது பகுதியில் மாத்தூர். செந்துறை போன்ற பகுதிகளில் இந்தத் தொழிற்சாலை அமைய அனைத்து சாத்தியக்கூறுகளும் இருப்பதாக அதிகாரிகள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை விட்டால் எனது தொகுதியில் வேறு எந்தவிதமான தொழிற்சாலையும் அமைய வாய்ப்பு இல்லாத காரணத்தால் எனது தொகுதியில் அதை அரசு அமைக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை அமைப்பது என்பதைப் பொறுத்தவரையில் எல்லா வற்றையும் பரிசீலித்த பிறகுதான் முடிவெடுக்க முடியும். ஆண்டிமடமா, திட்டக்குடியா, ஜெயங்கொண்டமா என்பதைப் பற்றி குழு முடிவெடுத்த பிறகுதான் அறிவிக்க இயலும்.

கல்லூரிகளில் இராணுவக் கல்வி.

674—(* வினா எண் 3020) **திரு. குமரிஅனந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கல்லூரிகளில் எங்கெங்கே இராணுவக் கல்வி பட்டப் படிப்பிற்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1. குருநானக் கல்லூரி, சென்னை-32, இளநிலை பாதுகாப்பியல்.

2. ஊரிஸ் கல்லூரி, வேலூர், இளநிலை பாதுகாப்பியல்.

3. அரசினர் கலைக் கல்லூரி, உதகமண்டலம், இளநிலை பாதுகாப்பியல்.

4. பாதுகாப்புப் படைப்பயிற்சிக் கல்லூரி, வெலிங்டன் உதகை, நிறைநிலை பாதுகாப்பியல்.

1986 மே 6]

(ஆ) 1. குருநானக் கல்லூரி—71 மாணவர்கள்.

2. ஊரிஸ் கல்லூரி, வேலூர்—158 மாணவர்கள்.

3. அரசினர் கலைக் கல்லூரி, உதகை—60 மாணவர்கள்.

4. பாதுகாப்புப்படை பயிற்சிக் கல்லூரி, வெலிங்டன், உதகை—328 மாணவர்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 4 கல்லூரிகளில் இந்தப் பயிற்சி நடத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாணவர்கள் என்று போட்டிருக்கிற காரணத்தால் மாணவ, மாணவியர் என்ற பன்மையையும் குறிக்கும், வேறு மாணவர்கள் என்ற பன்மையை அதாவது ஆண்களில் பன்மையையும் குறிக்கும். எனவே, அதில் மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்களா என்பதையும் அதைப்போலவே இந்த 4 கல்லூரிகள் போதுமானதாக இல்லை, எனவே இன்னும் அதிகமான இடங்களுக்கு விஸ்தரிக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணவிகள் பற்றிய விவரங்கள் தரப்படவில்லை. புதிய கல்லூரிகளிலே புதிதாகத் துவங்க வேண்டுமென்றால் அங்கேயிருந்து அவர்கள் விண்ணப்பம் செய்யவேண்டும். அந்த விண்ணப்பத்தைப் பார்த்து அங்கே இருக்கிற இடவசதி, பல்கலைக் கழக இணைவு, நிதியுதவிக் குழுவினுடைய முடிவு அரசின் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் அந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதனை விஸ்தரிப்பதற்குரிய சாத்தியக்கூறுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ராணுவப் பயிற்சிபோல போலீஸ் பயிற்சியும் கொடுக்கவேண்டுமென்று நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கையில் பேசியிருக்கிறேன். அதுவும் மாண்புமிகு அமைச்சரின் பரிசீலனையில் இருக்கிறதா?

[1986 மே 6

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்டால் விவரங்களைச் சேகரித்துத் தரலாம்

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவக் கல்விக்கு பட்டப்படிப்பு இருப்பதுபோல், அரசுப் பள்ளிகளிலும் இராணுவக் கல்வியைக் கற்றுத் தருவதற்கு உரிய வகையில் ஏதாவது பள்ளிகளை அரசு நடத்துகிறதா? அப்படி நடத்தவில்லை என்றால் இனிமேலாவது இராணுவக் கல்வியைக் கற்றுத் தருவதற்குப் பள்ளிகளைத் துவங்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தற்போது சூழ்ந்து வருகிற வெளிநாட்டு அச்சுறுத்தலை எதிர்நோக்கி—இன்றையதினம் மேலைநாடுகளில், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் கட்டாய இராணுவப் பயிற்சி என்ற வகையில் மெட்ரிக்குலேஷன் படிப்பு முடிந்தவுடன் இரண்டாண்டுகள் பயிற்சிக்காக அனுப்புகிறார்கள். ஆகவே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்தியாவிலும் அப்படிப் பட்ட ஒரு கல்வியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்து ப்ளஸ் 2 வகுப்பு முடிந்தவுடன் அந்தக் கல்வியை ஆரம்பிக்கிற செயற்குறிப்பு பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயமான இராணுவப் பயிற்சி என்ற ஒரு செயற் குறிப்பு அரசினிடத்தில் இல்லை. ஆனால் என்.சி.சி.-யில் அதிகப் படியான மாணவர்களுக்கு பயிற்சி தரவேண்டுமென்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. ஆனால் மத்தியிலே இருக்கிற அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் இப்போது இருக்கிற இந்த அளவே போதும் என்ற கருத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே என்.சி.சி. என்ற அந்தப் பயிற்சியையும் கூட விஸ்தரிக்கக் கூடிய நிலை இன்றையதினம் இல்லை.

1986 மே 6]

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்யாவிலே 5 ஆம் வகுப்பு முதல் ராணுவக் கல்வி யிலே பயிற்சியும் கொடுத்து கற்றுக் கொடுக்கப்படுவதாக ரஷ்யா சென்று வந்த என் நண்பர்கள் சொன்னார்கள். இப்போது எப்படி நாம் தொழில் கல்வியையும், அதன் பயிற்சியையும் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கு கற்றுக் கொடுக்கிறோமோ, அதுபோல மேல்நிலைப் பள்ளிகளிலிருந்தாவது அந்த ராணுவக் கல்வியை இந்த ஆண்டிலிருந்தாவது தொடங்கி பயிற்சி கொடுக்க அரசு முன்வருமா அல்லது இனியாவது அதற்கான பரிசீலனையை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ரஷ்யாவிலே இருப்பதில் எல்லாம் அங்கொன்றும் இங் கொன்றுமாக எடுத்து இங்கே பின்பற்ற முடியாது. வேண்டு மானால் முழுவதுமாக பின்பற்றினால் சரியாக இருக்கும்.

Grant to Anglo-Indian Schools.

* 675 (Q. No.—3850) Thiru G. K. FRANCIS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there are proposals with the Government to meet the present enhanced fees levied in Anglo-Indian Schools by suitably increasing tee compensation Grant to Anglo-Indian Students;

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கு, அவைகள் 1982-83 ஆம் ஆண்டில் ஆங்கிலோ இந்திய மாணவர்கள் அல்லாத ஏனைய மாணவர்களிடம் இருந்து வசூல் செய்த படிப்பு கட்டண வீதத்தில் 1985-86-ம் கல்வி ஆண்டிலிருந்து இப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கான படிப்பு கட்டண இழப் பீட்டு மான்யம் (Fee Compensation Grant) வழங்க அரசாணை நிலை எண் 348, கல்வி, நாள் 18—3—1986-ல் அரசு உரிய ஆணைகள் வெளியிட்டுள்ளது.